# தொன்மை சிறப்புமிக்க கார்த்திகை அகல் விளக்கு

**திரு. கி.ஸ்ரீதரன்**
**தொல்லியல் துணை கண்காணிப்பாளர்**
**(துணை இயக்குனர்) (ஓய்வு)**
**தமிழ்நாடு தொல்லியல்துறை,**
**சென்னை**

தமிழகத்தில் பண்டைய காலந்தொட்டு கார்த்திகை வழிபாடு இருந்து வந்துள்ளதை நாம் அறிவோம்.தீபத்திருவிழாவின் ஒர் அங்கமாக ,வீடுகள்தோறும் களிமண் அகலில் தீபம் ஏற்றி வழிபடுகிறோம்.விளக்குகளில் பல மாற்றங்கள் வந்தாலும் ,களிமண் அகல்கள்தான்படுத்த்ன் மக்களால் பயன்படுத்தப்படுகிறது.திருக்கோயில்களில் களிமண் அகல்விளக்கில் விளக்கு ஏற்றுவது மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

அகல்விளக்கின் தொன்மையானது.வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனிதன் நெருப்பின் அவசியத்தை உணர்ந்திருந்தான்.சற்று நாகரீகம் அடைந்த புதிய கற்காலத்தில் ஒரிடத்தில் தங்கி வாழத் தொடங்கினான்.அப்பொழுது அவனுக்கு விளக்கு அவசியமானது.எனவே ஈரமான களிமண்ணை கைவிரலால் சற்று குழிவாகச் செய்து சிறுவிளக்குகள் பயன்படுத்திக் கொண்டான்.தமிழகத்தில் பையம்பள்ளி,மோதுர்,அப்புக்கல்லு போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கையால் செய்யப்பட்ட () அகல்விளக்குகள் கிடைத்தன.

அடுத்து சற்று முன்னேற்றம் அடைந்த இரும்புக் காலத்தில் சக்கரத்தில் வைத்து() வனைந்து சிறுசிறு விளக்குகள் அகல்களாக செய்யத் தொடங்கினான்.அதனை சூளையில் இட்டு பயன்படுத்தினான்.தொல்லியல் ஆய்விலும் இதற்கும் பல சான்றுகள் கிடைத்துள்ளன.அகல்விளக்குகளை இன்றும் சக்கரத்தில் வைத்து செய்வதை பார்த்து வருகிறோம்.

ஈரோடு அருகே கொடுமணல் ,கரூர்,கீழடி ,மாங்குடி,அரிக்கமேடு போன்ற பல ஊர்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் பண்டைய தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட சிறு பானைகள் அகல் போன்றவை கிடைத்துள்ளன.கிடைத்த அகல்களின் மேற்புறத்தில்'கூல அந்தைய் சம்பன் அகல்',வாருணி இய் அகல் ',முதிகுயிரஅன் அகல்', குற அகல்' என்றெல்லாம் பண்டைய தமிழ் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுவது சிறப்பாகும்.இவை 2000 ஆண்டுகள் பழமையான சிறப்பு உடையதாகும்.

சங்க இலக்கியங்களான அகநானூறு,நற்றிணை,நெடுநல்வாடை,சிலப்பதிகாரம் போன்றவற்றில் அகல்விளக்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.கார்த்திகை நாளில் வரிசையாக மகளிர் ஏற்றி வைத்த அகல் விளக்குகள் இலவமரப் பூக்கள் அடுக்கடுக்காய் பூத்திருப்பது போல உள்ளது என ஔவையப் பிராட்டியார் ஒரு பாடலில் குறிப்பிடுவதைக் காணலாம்.

அகல் விளக்குகள் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்தது.பிற்கால களிமண் விளக்குகளில் பல மாற்றங்களைக் காணமுடிகிறது.ஒரு முகம் உடையதாக் இருந்த விளக்குகள் 4,6,8 திரிகள் போடும் அளவுக்கு பெரியதாகச் செய்யப்பட்டது. இத்தகைய விளக்குகளில் நடுப்பகுதி சற்று உயர்ந்து மேடாக ,நூல்திரி வைப்பதற்கு ஏற்றவாறு இருப்பதையும் காணமுடிகிறது.இது போன்ற விளக்குகள் கோவை அருகே போளுவாம்பட்டி, பேரூர் மற்றும் தாராசுரம் ,திருவாமாத்தூர்,பழையாறை போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களில் கிடைத்துள்ளன.பழையாரில் நடைபெற்ற தொல்லியல் அகழாய்வில் ஒரே இடத்தில் 100க்கும் மேற்பட்ட அகல்விளக்குகள் கிடைத்தன.இது உற்பத்தி செய்யும் இடமாக() விளங்கியிருக்க வேண்டும்.

அகல்விளக்குகள் திருக்கோயில் வழிபாட்டில் முக்கிய இடம் பெற்று விளங்கியதைக் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன.மேலும் நாகப்பட்டினம் காயா ரோகண முடையார் கோயிலின் மாசிமகத் திருநாள் 6 நாட்களிலும் விளக்கு எரிக்க நிலம் தானம் அளிக்கப்பட்டதாக முதலாம் ராஜாதிராஜம் கல்வெட்டு கூறுகிறது,தான் அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லையைக் குறிக்கும் பொழுது தேவதான அகல்புறம் எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.கோயிலில் அகல்விளக்கு எரிப்பதற்காக அளிக்கப்பட்ட நிலம் அகல்புறம் என அழைக்கப்பட்டதை நம்மால் அறிய முடிகிறது.

செம்பினால் ஆன அகல்களும் பயன்படுத்தப் பட்டன என்பதை திருச் சோற்றுத்துறை கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.32 அகல் விளக்குகள் அளிக்கப்பட்டன.மேலும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை திருவிழ நடைபெறவும் ,விளக்கு ஏற்றவும் தானம் அளிக்கப்பட்ட செய்தியை திருவண்ணாமலை ,கீரனூர் (நன்னிலம் அருகில்) செங்கற்பட்டு அருகே ஆதனூர் வேதநாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

இன்று களிமண் அகல் விளக்குகளிலும் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவந்துவிட்டது.பலவிதமான வடிவங்களில் விற்பனைக்கு வந்துள்ளன.எனினும் சிறிய களிமண் அகல் விளக்குகளில் ஏற்றப்படும் தீபம் மிகச் சிறந்தது என ஆன்மீகப் பெரியோர்கள் கூறுகின்றனர்.பண்டித்தொட்டு ஒளிவடிவான இறைவனை கார்த்திகை மாதத்தில் விளக்க்கேற்றி வழிபடுகிறோம்.மிகுந்த சிரமத்திற்கு இடையே இன்றும் தமிழகத்தில் மானா மதுரை,காஞ்சிபுரம் போன்ற இடங்களில் அகல் விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன.நமது மரபை தொடர்ந்து பின்பற்றி இயற்கைவளம் காப்போம்,




**1.போளுவாம்பட்டி அகழாய்வில் கிடைத்த அகல் விளக்கு**




2.திரு,வீரராகவன் சேகரிப்பில் உள்ள அகல்விளக்கு, விழுப்புரம்.